1995 மார்ச் 29]

156—

திரையரங்குகளில் மூன்று காட்சிகள் நடத்துதல்

*33242—**திரு க. அர்ச்சுனன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா --

உழைப்பவர் நிலையைக் கருத்தில் கொண்டு திரையரங்குகளில் மாலை ஐந்து மணிக்கு மேல் மூன்று காட்சிகளை நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாலை 5.00 மணிக்கு மேல் 3 காட்சிகளை நடத்த அனுமதிக்க இயலாது. இரவு 1.30 மணிக்கு மேல் திரையரங்குகளை திறந்து வைத்து இருக்கக்கூடாது என்று நிபந்தனை உள்ளது. அந்த நிபந்தனையைத் தளர்த்த இயலாது.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் கேட்டிருப்பதன் நோக்கமே பகல் நேரங்களிலே திரையரங்குகளிலே சினிமாக்களைக் காண்பிக்கக் கூடாது என்பதற்காகத்தான். வளர்ந்து வரக்கூடிய இந்தியா போன்ற நாடுகளில் பகல் நேரங்களிலே கேளிக்கை, சினிமா போன்ற காட்சிகளை காண்பிப்பதன் மூலமாக நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக உழைக்கக்கூடியவர்கள் இந்தத் திரையரங்குகளுக்குப் போய் உட்கார்ந்து விடுகிறார்கள். இந்தமாதிரி நிலைமை நகர்ப்புறங்களிலே இருந்து இப்போது கிராமப்புறங்களுக்கும் போய், கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய திரையரங்குகளிலேகூட நிறைய பேர் காலைக் காட்சி, மாலைக் காட்சி என்று பார்த்துவிட்டு நேரத்தை வீணடித்து சோம்பேறிகளாக இருக்கிறார்கள். உழைப்பவர்கள், வயது முதிர்ந்தவர்கள் எல்லாம் உழைத்துச் சம்பாதிக்கின்ற நிலையில் அவர்களுடைய ஊதியத்தில் இளஞ்சிறார்களும், பெண்களும் சினிமா திரையரங்குகளிலே நேரத்தை வீணடிக்கிற இந்த நிலைமையைப் போக்குவதற்காக மாலை 5.00 மணிக்கு மேலே எத்தனைக் காட்சிகளை வேண்டுமானாலும் முடிந்த வரைக்கும் வைத்துக் கொள்கிற வகையில் பகல் காட்சிகளை ரத்து செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

[1995 மார்ச் 29

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி, உழைப்பவர் நிலையைக் கருத்தில் கொண்டு மாலை 5.00 மணிக்கு மேல் 3 காட்சிகள் காட்டப்படுமா என்பது. இரவு நேரங்களில் 3 காட்சிகள் காட்டப்படுமேயானால் காலை 4.30 மணி வரை சினிமாக்கள் நடந்து கொண்டிருக்கும். திரையரங்குகளைத் திறந்து வைக்க வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, இது உழைப்பவர்களுடைய பிழைப்பைக் கெடுப்பதாகத்தான் இருக்கும். இரவு முழுவதும் தூங்காமல் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால், காலையில் கொட்டகையை விட்டு வேலைக்குச் செல்லும்போது கொட்டாவிதான் வரும். ஆகவே, இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 காட்சிகள் தேவையில்லாவிட்டால் இரண்டு காட்சிகளாகக் குறைத்துக் கொள்ளலாம். எனவே, நான் கேட்டிருக்கிற நோக்கமே, வளர்ந்து வரக்கூடிய இப்படிப்பட்ட நாடுகளில் உழைக்கக்கூடியவர்கள் பகல் நேரங்களிலே சினிமா திரையரங்குகளுக்குப் போய் தங்களுடைய நேரத்தைக் கழித்துக் கொண்டு இருக்கிறார்கள். பள்ளிகளுக்குச் செல்லக்கூடிய மாணவர்களெல்லாம், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கட் அடித்துவிட்டு சினிமா தியேட்டர்களுக்குப் போய் விடுகிறார்கள். வீட்டிலே இருக்கிற பெண்கள் ஆண்களை வேலைக்கு அனுப்பிவிட்டு சமைக்காமல்கூட சினிமாத் திரையரங்குகளுக்கு வந்து உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலைக்காகத்தான் நான் சொல்கிறேன். எனவே, நாட்டினுடைய வளர்ச்சியை மனதில் கொண்டு, பகல் நேரத்திலே இந்தக் காட்சிகளை எல்லாம் ரத்து செய்துவிட்டு, மாலை 5.00 மணிக்கு மேலே எத்தனைக் காட்சிகளை வைத்துக்கொள்ள முடியுமோ அத்தனைக் காட்சிகளை மட்டும் வைத்துக்கொள்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவு 1.30 மணிக்கு மேலே திரையரங்குகளை திறந்து வைத்திருக்கக் கூடாது என்று நிபந்தனை இருக்கிறது. அந்த நிபந்தனையைத் தளர்த்த இயலாது. பகல் நேரங்களில் சினிமாவுக்கு சென்று விடுகிறார்கள், மாணவர்கள் கட் அடிக்கிறார்கள் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதில் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. நாம்தான் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.